**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 11/2025**

**Deposition of P.W. 4**

| | |
|---|---|
| **Name** | : திரு.பிரபாகர் |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |
| **Dated** | : **28.03.2026** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம் அம்பாசமுத்திரம் வனக்கோட்டம் கடயம் வனச்சரகத்தில் வனவராக பணி புரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயம் பூதப்பாண்டி வனச்சரகம் மருந்துவாழ்மலை பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். இந்த வழக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். 2 மற்றும் 3 எதிரிகளையும் தெரியும். கடந்த 5.9.2021 அன்று பூதப்பாண்டி வனச்சரகத்தில் சூட்டு

பொற்றை வனப்பகுதியில் காட்டுப்பன்றியை வேட்டையாடியதாக எதிரிகள் மீது வனஉயிரின வழக்கு 6/2021 பதிவு செய்யப்பட்டது. 4 எதிரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்த நிலையில் 1வது எதிரி மட்டும் தப்பி தலைமறைவாக இருந்தார். அவரை தேடப்பட்டு வந்த நிலையில் 2.2.2022ல் அன்று மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம் முன்பாக ஆஜராகி அவருக்கு 15 நாட்கள் காவல்அடைப்பு செய்யப்பட்டது. 14.2.2022 அன்று வனக்காவலுக்கு மனு செய்து 15.2.2022 அன்று 1 நாள் வனக்காவலுக்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி வனச்சரக அலுவலர் முன்னிலையில் 1வது எதிரி அஜித் என்ற கோட்சா தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவர் கூறியது 4.9.2021 அன்று அவரது நண்பரான டைசன் மாணிக்கம் என்பவரது உறவினர் தான் ஏசுவடியான் என்பவர் சூட்டுபொற்றை அருகில் பூங்காவனம் தோட்டத்தில் காவலாளியாக வேலைபார்த்து வருவதாகவும், வனப்பகுதியில் இருந்து காட்டுபபன்றிகள் நிறைய நடமாடி வருவதாகவும், அதை வேட்டையாடவேண்டும் என முடிவு செய்ததாகவும் சொன்னார். 1வது எதிரி அவரது நண்பரான பணக்குடி பகுதியை சார்ந்த இசக்கி முத்து என்பவரிடமிருந்து 7 நாட்டுவெடிகுண்டுகளை வாங்கி வந்து அதில் 4 வெடிகுண்டுகளை கோழியின் குடலுடன் கலந்து சரணாலயப்பகுதியில் ஆங்காங்கே வைத்துவிட்டு வந்ததாகவும் பின்னர் ஆரல்வாய்மொழிக்கு சாப்பிட சென்றதாகவும் கூறினார். 7.30 மணி அளவில் வெடிசத்தம் கேட்டு வந்த திசையில் சென்று பார்த்த போது காட்டுப்பன்றி ஒன்று வாய்கிழிந்த

நிலையில் இறந்து கிடந்தது. மீண்டும் 3 மணி நேரம் கழித்து இன்னொருமுறை வெடி வெடிக்கும் சத்தம் கேட்டது. திரும்ப போய் பார்த்தபோது இன்னொரு பன்றியும் இறந்து கிடந்தது. காட்டுப்பன்றியை எடுத்துவர உதவிபுரிய அவரது நண்பர் ஸ்டீபன்ராஜ் அழைத்துவந்து அவரது fassino வாகனத்தில் எடுத்து செல்லும்போது ஆள்நோட்டம் செய்வதற்காக 3 வது எதிரி மற்றும் 4 வது எதிரி ஆகியோர் முன்னால் சென்றார்கள். அவர்களிடம் 1 வது எதிரி போன்மூலம் யாராவது வழியில் முன்னார் செல்கிறார்களா என போனில் கேட்டுவந்துள்ளார். ஆர்பிஆர் பாலம் அருகே வரும்போது வனஅதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்டபோது 1 வது எதிரி அவர்களை இடித்து தள்ளிவிட்டு தப்பியோடியதாக கூறினார். பின்பு வழக்கின் மற்ற எதிரிகளை வனத்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள். பின்னிட்டு கடந்த 15.2.2022 ஆம் தேதி 1 வது எதிரி அஜித் என்ற கோட்சா வனச்சரக அலுவலர் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் நான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன்.